1993 ஏப்ரல் 15]

தேடுக்கப்படும் மருத்துவர்களை ஒப்பந்தத்தின் அடிப்படையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நியமிப்பாரா என்று கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 மருத்துதவர்கள் அங்கு இருப்பதாக எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். தேவைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 343, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

343 —

ஈசநத்தத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தல்

* 10409—திருமதி கே. மரியம் உல் ஆசியா:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அரவக்குறிச்சி ஒன்றியம், ஈசநத்தம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை. ஏற்கனவே அந்த இடத்தில் 9.9.1988 முதல் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சி ஒன்றியம் ஈசநத்தம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கனவே இயங்கி வந்தாலும் அங்கு பொதுமக்களால் இலவசமாக அளிக்கப்பட்டுள்ள கட்டிடத்தில்தான் அந்த ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகின்றது. அந்தக் கட்டிடத்தின் சொந்தக்காரரும் அவரது சொந்த உபயோகத்திற்காக அதை திருப்பிக் கேட்கின்றார். எனவே ஈசநத்தம் கிராமத்தில் உள்ளவர்கள் ஆரம்ப சுகாதார நிலையத்திற்காக நிலமும்

வாங்கியிருக்கின்றார்கள். முன் பணமும் கட்டியிருக்கின்றார்கள். எனவே, புதிதாக வாங்கிய அந்த இடத்தில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈசநத்தம் பகுதியில் 15 கி.மீ. சுற்றளவுக்கு எந்த ஆரம்ப சுகாதார நிலையமும் இல்லை. அங்கு சுமார் 50 ஆயிரம் மக்கள் இருக்கின்றார்கள். அதிகமான அளவு நோயாளிகள் சிகிச்சை பெற்றுப் பயனடைந்து வருகின்றார்கள். மேலும் அங்கு மருத்துவர் இல்லாத குறை இருக்கிறது. அதனால் அரவக்குறிச்சியிலிருந்து டெபுடேசனில் அங்கு செல்கின்றார்கள். அவர்களும் நேரத்திற்குச் செல்வதில்லை. காலதாமதமாகச் செல்லுவதால் நோயாளிகள் மிகவும் பாதிக்கப்படுகின்றார்கள். மேலும் ஈசநத்தத்தை ஒட்டியுள்ள திண்டுக்கல் - அண்ணா மாவட்டத்தைச் சேர்ந்த கிராம மக்கள் பலரும் அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வந்து பயன் பெறுகின்றார்கள். நிதிநிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சொன்னார்கள். அதனுடைய முக்கியத்துவத்தைக் கருதி, இந்த நிதியாண்டிலேயே அந்தக் கட்டிடத்தைக் கட்டித் தருவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்றும், மேலும் அங்கு ஒரு ஆண் மருத்துவரையும், பெண் மருத்துவரையும் நியமிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும். ஆனால் கட்டிடம் கட்டுவதைப் பொறுத்தமட்டில், நிதிநிலைமைக்கு ஏற்பத்தான் நடவடிக்கை எடுக்க முடியும். இந்த ஆண்டு சேர்க்க முடியுமா என்பதைப் பற்றி இப்பொழுது சொல்ல இயலாது. எனவே, எதிர்காலத்திலே நிதிப்பிரச்சினை சரியாக இருக்கின்ற நேரத்தில் கண்டிப்பாக உங்களுக்கு ஒரு கட்டிடம் கட்டித் தருவதற்கு பரிசீலிக்கப்படும். மருத்துவரை நியமிப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 344. டாக்டர் க. கோபால், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.